VI.—GOVERNMENT BILLS—*cont.*

(3) THE MADRAS (TRANSFERRED TERRITORY) EXTENSION OF TERM OF OFFICE OF MUNICIPAL COUNCILLORS BILL, 1958 (L.C. BILL NO. 9 OF 1958)

* THE HON. SRIMATHI LOURDHAMMAL SIMON: Mr. Speaker, Sir, I beg to move—

'That the Madras (Transferred Territory) Extension of Term of Office of Municipal Councillors Bill, 1958 (L.C. Bill No. 9 of 1958) as passed by the Legislative Council be taken into consideration'.

Sir, the municipal councils in the transferred territory are governed by the Travancore District Municipalities Act, 1116 (Travancore Act XXIII of 1116). The term of office of the councillors of these municipal councils expires on the forenoon of the 1st January 1959. According to the present position, elections for these municipalities will have to be conducted before that date. The provisions of the Madras District Municipalities Act, 1920, have not yet been extended to the transferred territory. Such extension has to be done by legislation and it will take some time before it is finalized. It is not therefore possible to conduct the elections under the Election Rules of this State before the said date, namely, the 1st January 1959. It is therefore proposed to take power for the Government to continue the existing councils for six months more, i.e., up to the 30th June 1959 so that elections of councillors to these municipalities may be conducted before the expiry of this period. It is therefore necessary that we should proceed with the proposed legislation. I therefore move that the Bill be taken into consideration.

MR. SPEAKER: Motion moved—

'That the Madras (Transferred Territory) Extension of Term of Office of Municipal Councillors Bill, 1958 (L.C. Bill No. 9 of 1958) as passed by the Legislative Council be taken into consideration.'

* SRI M. S. SELVARAJAN: கனம் சபாநாயகர் அவர்களே, பழைய கேரள ராஜ்யத்திலிருந்த தமிழ் பகுதிகளில் பெரும் பாலானவை நமது ராஜ்யத்துடன் இணைக்கப்பட்டிருக்கின்றன. நம் ராஜ்யத்துடன் இணைக்கப்பட்டிருக்கும் அந்தப் பகுதிகளிலுள்ள பல சட்டங்களும் நடைமுறைகளும் இந்த ராஜ்யத்தில் இதர பகுதிகளிலுள்ள சட்டங்களினின்றும் நடைமுறைகளி னின்றும் வேறுபட்டவையாக இருப்பதை நாம் காண்கிறோம். இதைப் பார்க்கும்போது, அந்தப் பகுதிகள் சென்னை ராஜ்யத்துடன் இணைந்து பல மாதங்களாகியும்கூட என் இன்னும் ராஜ்யத்தின் எல்லாப் பகுதிகளிலும் சட்டதிட்டங்கள் ஒருப்போலவே அமல் நடத்தப்படுவதில்லை என்ற கேள்வி எல்லோருடைய மனதிலும் எழலாம். ஒரு ராஜ்யத்தைச் சேர்ந்த சில பகுதிகள் வேறு ராஜ்யத்துடன் இணைக்கப் பட்டாலும், ஒரு நிர்வாகப் பிரதேசத்தைச் சேர்ந்த சில பகுதிகள் வேறு நிர்வாகப் பிரதேசத்துடன் சேர்க்கப்பட்டாலும், அதற்குப் பிறகு அதன் விளைவாக சில சிக்கல்கள் அந்தப் பகுதிகள் இருக்கும் புதிய ராஜ்யத்திலும் புதிய பிரதேசத்திலும் ஏற்படுவதை நாம் பார்க்கிறோம். திருவிதாங்கூர் ராஜ்யத்துடன் கொச்சிப் பகுதி இணைந்த பிறகும் இதே நிலைமை ஏற்பட்டது. அந்த இணைப்பு ஏற்பட்டு சுமார் 15 வருஷங்கள் ஆகிவிட்டன. 15

5th November 1958] [Sri M. S. Selvarajan]

வருஷங்கள் ஆகியிருந்தாலும், அந்த இரு பகுதிகளிலும் எல்லா நடைமுறைகளும் சட்டதிட்டங்களும் இன்றுவரையில் ஒரே மாதிரியாக ஆகிவிடவில்லை. இதைப் பார்க்கும்போது, பழைய கேரள ராஜ்யத்திலிருந்து ஓரிரு வருஷங்களுக்கு முன்பே நம் ராஜ்யத்துடன் இணைந்த பகுதிகளிலுள்ள சட்டதிட்டங்கள் இந்த ராஜ்யத்தின் இதர பகுதிகளிலுள்ள சட்டதிட்டங்களினின்றும் வேறுபட்டவையாக இருப்பதில் வியப்பில்லை என்பதை நாம் புரிந்துகொள்ள முடியும். சென்னை ராஜ்யத்தின் இதர பகுதிகளில் எத்தகைய பிரதேசங்கள் மேஜர் பஞ்சாயத்துக்கள் என்று அழைக்கப்படுகின்றனவோ அவை கன்னியாகுமரி போன்ற பிரதேசங்களில் முனிசிபாலிடிகள் என்று அழைக்கப்படுகின்றன. அவை திருவாங்கூர்-கொச்சி ராஜ்யத்திலிருந்தபோது அந்தப் பெயராலேயே அழைக்கப்பட்டுவந்தன. எனவே அதே பெயருடன் இங்கேயும் அழைக்கப்பட்டு வருகின்றன. இதர பகுதிகளிலுள்ள பஞ்சாயத்துக்களின் வருமான வரையறையும் கன்னியாகுமரி முதலிய பகுதிகளிலுள்ள முனிசிபாலிடிகளின் வருமான வரையறையும் வேறுபடுகின்றன. நமது ராஜ்யத்தில் எல்லா நடைமுறைகளையும் சட்டதிட்டங்களையும் கூடியசீக்கிரம் எல்லா இடங்களிலும் ஒரேமாதிரியாக அமல் நடத்துவதற்கு முயற்சி செய்ய வேண்டியது அரசாங்கத்தின் கடமை. ஒரேமாதிரியான பகுதியை கன்னியாகுமரி முதலிய பிரதேசங்களில் முனிசிபாலிடி என்றும், இதர பிரதேசங்களில் மேஜர் பஞ்சாயத்து என்றும் அழைப்பதால் பெரிய கஷ்டங்கள் ஏற்படும் என்று நான் கருதவில்லை. இதர பகுதிகளிலுள்ள பஞ்சாயத்துக்கள் நிர்வாக அதிகாரிகளால் நிர்வகிக்கப்பட்டு வருகின்றன; பஞ்சாயத்துத் தலைவர்களும் பஞ்சாயத்து மெம்பர்களும் தேர்ந்தெடுக்கப்பட்டவர்கள். அதேமாதிரி கன்னியாகுமரி போன்ற பகுதிகளிலுள்ள இந்தப் பஞ்சாயத்துக்களிலும் தலைவர்களும் மெம்பர்களும் தேர்ந்தெடுக்கப்பட்டவர்கள்தான்; அந்தப் பஞ்சாயத்துக்களும் நிர்வாக அதிகாரிகளால்தான் நிர்வகிக்கப்பட்டு வருகின்றன. கன்னியாகுமரி முதலிய பகுதிகளில் இந்த முனிசிபாலிடிகளை நடத்தும் நிர்வாக அதிகாரிகள் அதற்கென்றே பயிற்சியளிக்கப்பட்டவர்களாக இருக்கிறார்கள்.

3–10 p.m.

இங்கு நிர்வாக அதிகாரிகளை பயிற்றுவிக்கும் முறை அல்லது நடைமுறைகள் அதேபோல் அங்கு பின்பற்றப்படாமல் வேறு விதமாக பயிற்றுவிக்கப்படலாம். ஆகவே அங்குள்ள அதிகாரிகள் இங்கு பணியாற்றவும், இங்குள்ள அதிகாரிகள் அங்கு சென்று பணியாற்றவும் அவர்கள் தாங்களே இஷ்டப்பட்டாலும், அரசாங்கம் இஷ்டப்பட்டாலும் நம் ராஜ்யத்தில் உள்ளவர்கள் இந்த ராஜ்யத்தில் உள்ள எல்லா பாகங்களுக்கும் சென்று பணியாற்றுவதற்கு கஷ்டங்கள் பலதும் வரலாம். ஆகவே அவசரத்தைக் கருதி முனிஸபல் தேர்தல்களை ஓரளவு காலதாமதமாக நடத்த சட்ட ரீதியாக உரிமையை அரசாங்கம் கேட்டாலும்கூட எவ்வளவு சீக்கிரமாக அவைகளை நடத்த முடியுமோ அவ்வளவு சீக்கிரத்தில் நடத்தவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். அமைச்சர் அவர்கள் கேட்ட பிரகாரம் கூடுதல் சிறிது காலம் பெற்றுக்கொண்டாலும்கூட அதற்குள்ளாக இருக்கக்கூடிய எல்லா சிக்கல்களையும் தீர்த்துவிட்டு திருவிதாங்கூர்-கொச்சி, இரண்டு பிரதேசங்களின் இணைப்பும்கூட இன்னும் பூரணமாகத் தீரவில்லை என்ற காரணத்தை காட்டாது, அக்காரணத்தைக் கவசமாகக் கொள்ளாது இந்த ராஜ்யம் முழுமைக்கும் ஒரேவிதமாக எல்லாக் காரியங்களையும் நடத்துவதற்கு ஏற்பாடு செய்யவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். இந்த ராஜ்யம் பூராவிற்கும் ஒரே நிர்வாக அமைப்பு இருக்கவேண்டும். இந்த ராஜ்யம் முழுமையிலுமுள்ள சிப்பந்திகளின் நலபுலன்கள் ஒரேவிதமாக கவனிக்கப்படவேண்டும். ஆகவே, தேர்தல் நடத்துவதற்கு, சிறிது தாமதமாக நடத்துவதற்கு அனுமதி பெற்றாலும் அந்தக் காலத்திற்குள்ளாகவாவது எல்லாவிதமான சிக்கல்களையும் தீர்த்து ராஜ்யம் முழுமைக்கும் ஒன்றுபோல் வசதி செய்து கொடுக்கவேண்டும். ஆகவே அரசாங்கம் முனிசிபல் தேர்தல்களை சிறிது காலம் தாமதித்து நடத்துவதற்கு அனுமதி கேட்டிருப்பது சந்தர்ப்பத்திற்கு உகந்ததும், அங்குள்ள நிலைமைக்கு ஏற்றதுமாகும் என்று சொல்லிக்கொண்டு இதை ஆதரிக்கிறேன்.

[5th November 1958

SRI T. T. DANIEL: Mr. Speaker, Sir, while supporting this Bill, I would like to point out some facts for the consideration of the Government. Nearly two years ago, the transferred territory was added to the Madras State. The Government are very careful to consider and to study the peculiar conditions that are prevailing in that district before extending any of the existing Madras State laws to that district. Some of the laws that are prevalent in the Madras State have already been extended. But so far as the Municipal Acts are concerned, it is really proper for the Government to consider the peculiar difficulties which are experienced by the people in that district, because of the continuance of the existing law there. So far as that district is concerned, there is no Surcharge Act. The municipality is not collecting any tax from registration fees. This is one of the peculiarities prevalent there. So far as water tax is concerned, it is being collected by the municipality. There must be difference between the rates that are prevailing in that district and the rates that are prevailing in the other districts. In regard to the powers of the Commissioner also, I think there are some differences between the powers of the Commissioner there under the present law and the powers of the Commissioner under the District Municipalities Act here. Before extending this Act, it is proper for the Government to ascertain from the local representatives the particular difficulties that are being experienced at present by the continuance of that law there and also ascertain from them the nature of the difficulties that people will have to endure if the Madras District Municipalities Act, as it is, is extended to that place. It is really proper on the part of the Government to postpone the election till the time that is asked for in the Bill. But I would like to point out to the Government that further extension on no ground should be sought by the Government. It is better that elections are conducted as early as possible in that district, after studying all the difficulties in that district and after extending the Act to that district, if necessary, with some modification to suit the conditions prevailing there.

SRI A. GOVINDASAMY: சட்டமன்ற தலைவர் அவர்களே, புதிதாக நம் தாயகத்தோடு சேர்ந்திருக்கிற பகுதிகளில் நகரசபை தேர்தல்களை தள்ளிப்போடுவதற்காக கொண்டுவரப்பட்டிருக்கும் இந்த மசோதாவை நான் எதிர்க்கிறேன். அதற்கு காரணம், அப்பகுதிகள் நமது தாயகத்தோடு சேர்ந்து இரண்டு வருடங்களாகியும், திருவிதாங்கூர் முனிஸிபல் சட்டப் பிரகாரம் முனிசிபல் தேர்தல்கள் ஜனவரி முதல் தேதியோடு முடிகிறது, என்பது அவர்களுக்கு எற்கெனவே தெரிந்திருந்தும்கூட அப் பகுதிகள் இங்கு சேர்ந்தது முதல் இன்றுவரை யாதொரு நடவடிக்கைகளும் எடுக்காமல் தேர்தல்கள் நெருங்குகிறது என்ற சமயம் வரும்போது அந்த நெருக்கடியான கட்டத்தில் இந்த மசோதாவை இங்கு கொண்டுவந்து ஆறு மாத காலம் வேண்டுமென்று கேட்பது என்றால் அவர்கள் இதுவரை அவர்களின் பொறுப்பை உணராது இருந்திருக்கிறார்கள் என்ற குற்றச்சாட்டை நான் சொல்லாமல் இருக்க முடியாது. குறிப்பாக நான்கு முனிஸிப்பாலிட்டிகள்தான் அங்கு இருக்கின்றன என்ற தகவல் எனக்கு கிடைத்திருக்கிறது. ஒன்று, செங்கோட்டை, மற்றொன்று நாகர்கோவில், மூன்றாவது அம்மையார் அவர்களின் தொகுதியாகிய குளச்சல், அடுத்தது விளவங்கோடு என்று நினைக்கிறேன்.

இந்த நான்கு முனிஸிப்பாலிட்டிகளில் வோட்டர் லிஸ்ட் தயார் செய்யவோ அல்லது டிவிஷன்கள் பிரிப்பதற்கோ என்ன சங்கடங்கள் இருந்தது, இந்த இரண்டு வருடங்களில் என்று கேட்க விரும்புகிறேன். சாதாரணமாக கவனித்திருக்கக்கூடிய விஷயந்தான். அதை கவனித்திருந்தால், நமது தாயகத்தில் தேர்தல்கள் நடக்கும்போது, ஜனவரி அல்லது பிப்ரவரி மாதம் வரும் என்று நினைக்கிறேன், அந்தப் பகுதிகளிலும் தேர்தல் நடத்துவதற்கு வாய்ப்பு இருந்து இருக்க முடியும். அந்தப் பகுதிகளில்மட்டும் தேர்தல்களை ஆறு மாதம் ஒத்திப்போடவேண்டுமென்று கேட்பது என்று சொன்னால், நான் அமைச்சரவையை குற்றம் சாட்டாமல் இருப்பதற்கில்லை. தேர்தல் நெருங்கும்போது இந்த மசோதாவைச் கொண்டு வருவானேன் ? திருவிதாங்கூர் பகுதியோடு அவைகள் எதாவது தொடர்பு கொண்டு அதன் பேரில் ஒரு முடிவு காணாமல் இருந்திருந்தால் வேண்டுமானால் இப்படி காலதாமதம் கேட்க அவசியம் இருந்திருக்கக்கூடும். எப்பொழுது அந்தப் பகுதிகள் தாயகத்தோடு இரண்டறக்கலந்துவிட்டனவோ அப்பொழுதே இதற்கு வேண்டிய நடவடிக்கைகள் எடுத்திருக்கவேண்டும். அப்படி செய்ய தவறிய குற்றத்திற்காக அரசாங்கத்தின்மீது நான் பழி சுமத்த விரும்புகிறேன். அதற்கு அமைச்சர் அவர்களின் சமாதானத்தை அறிய விரும்புகிறேன்.

* **Sri V. K. RAMASWAMY MUDALIYAR**: Mr. Speaker, Sir, this is only a Bill for extending the life of the Municipal Councillors of the transferred territory of Shencottah and other taluks in the Kanyakumari district. I know the practical difficulties involved in having elections immediately. We are now completely revising the Municipal Act, and a committee is going into this question. We have finally decided to have the elections of the municipal councils in our State, including the Kanyakumari district, before the 30th April 1959. The present term of the municipal councillors of the Kanyakumari district expires by the 1st January 1959. Before the election dates, I am sure we will be finalising the Municipal Amendment Act, and the elections also will be completed some time before March 1959. So, I would request the Hon. Minister to see that election are held even in the Kanyakumari district in the month of March instead of postponing them by two months. The Hon. Minister says that there will be some difficulty in making provision for extending the Act. I have nothing to say except to request Government to see that elections are held at least before April and that there is no further postponement of the elections to the municipal councils.

The Hon. Srimathi LOURDHAMMAL SIMON: கனம் சபாநாயகர் அவர்களே, இன்று இங்கு கொண்டுவந்திருக்கின்ற மசோதா தேர்தல் நடத்துவதில் கால தாமதம் ஆக்கவேண்டுமென்றோ அல்லது வோட்டர்கள் லிஸ்டு தயாரிப்பதில் கால தாமதம் செய்யவேண்டுமென்றோ அல்லது வேறு விதமான தகராறுகள் இருக்கிறது என்பதற்காகவோ இந்த நீடிப்பு வேண்டும் என்று கோரப்படவில்லை. பொதுவாக சட்ட இணைப்புகள் எல்லாம் இதுவரை முடிவடையவில்லை. பாதிச் சட்டங்கள் தான் அங்கு இயங்குகின்றதே தவிர பூராவும் இதுவரை முற்றுப்பெறவில்லை. ஆகவே இந்த தேர்தலை நடத்துவதற்கு இன்னும் ஆறு மாதம் நீடித்து தரவேண்டும் என்று கேட்கப்பட்டிருக்கிறது. இந்த ஆறு மாதம் என்பது ஜூன் மாத கடைசிவரை இருக்கலாம். இருந்தாலும் அதற்கு முன்னதாகவே இந்த இணைப்புகள் எல்லாம் முற்றுபெற்றுவிட்டால் ஜூன் மாதத்திற்கு முன்னதாகவே தேர்தலை நடத்துவதற்கு அரசாங்கம் முயற்சி

எடுக்கும் என்பதையும் தெரிவித்துக்கொள்கிறேன். ஆகவே இப்போது ஆறு மாதகாலம் நீடித்து தர வேண்டும் என்றுள்ள மசோதாவை நிறைவேற்றி தரவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

MR. SPEAKER : The question is—

'That the Madras (Transferred Territory) Extension of Term of Office of Municipal Councillors Bill, 1958 (L.C. Bill No. 9 of 1958) as passed by the Legislative Council, be taken into consideration'.

The motion was put and carried and the Bill was taken into consideration.

Clause 2 was put and carried.

Clause 1 and the Preamble were put and carried.

* THE HON. SRIMATHI LOURDHAMMAL SIMON : Sir, I move—

'That the Madras (Transferred Territory) Extension of Term of Office of Municipal Councillors Bill, 1958 (L.C. Bill No. 9 of 1958), as passed by the Legislative Council, be passed'.

SRI A. GOVINDASAMY : இணைப்பு பூர்த்திபெறுததினுல்தான் இப்போது தேர்தல் நடத்துவதற்கில்லை என்றும் அதற்காக ஆறு மாத காலம் நீடித்து தரவேண்டும் என்று கேட்டுக்கொண்டார்கள். அங்கே வோட்டர் லிஸ்டு தயார் செய்வதிலும், வார்டுகள் பிரிப்பதிலும் ஏற்படுகின்ற காலதாமதத்தினுல்தான் இவ்விதம் நீடிக்கவேண்டியிருக்கிறது என்று சொன்னேன். அதற்கு கனம் அமைச்சர் அவர்களின் பதில் என்ன வென்று அறிய விரும்புகிறேன்.

THE HON. SRIMATHI LOURDHAMMAL SIMON : சட்டங்களை இணைப்பதில் ஏற்படுகின்ற காலதாமதமே தவிர, வோட்டர் லிஸ்டு தயாரிப்பதிலோ, அல்லது வார்டுகள் பிரிப்பதிலோ, அல்லது வேறு எந்த விதமான தகராறுகளினுலோ இந்த காலதாமதம் ஏற்படுவதில்லை என்று நான் என்னுடைய பதிலிலே கூறியிருக்கிறேன்.

The motion was put and carried and the Bill was passed.

(4) THE MADRAS PANCHAYATS BILL, 1958 (L.A. BILL NO. 33 OF 1958).

MR. SPEAKER : We will take up the next item of business, viz., the Madras Panchayats Bill, 1958 (L.A. Bill No. 33 of 1958).

SRI M. P. SUBRAMANIAM : Sir, I rise on a point of order. I wish to draw the attention of the Hon. Speaker to Rule 71 of the Assembly Rules which says—

'A motion must not raise a question substantially identical with one on which the Assembly has given a decision in the same session'.

We have discussed this Panchayats Bill at the last sitting of this same session, and we have taken decisions. The same thing cannot be reopened now in the same session itself. I think it is out of order to bring in the Panchayats Bill for consideration of the amendments passed by the Council.